மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 27 வியாழக்கிழமை 13.11.2025 கதிர் 369

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




## பல்கலைக்கழக ஆட்சேர்ப்பில் அரசியல் தலையீடு? அரசியல் லாபம் தேடும் செய்தி என்கிறார் ரஜீவன்!

யாழ். பல்கலைக்கழகத்துக்குக்கிடைத்துள்ள ஆளணி அனுமதியின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதிகாரத் தலையீடு செய்கிறார் என்று சாரப்பட நேற்றைய மாலைக்கதிர் பத்திரிகையில் "யாழ். பல்கலைக்கழக வெற்றிடங்களை நிரப்புவதில் ஆளுந்தரப்பு எம். பி அதிகாரத் தலையீடு - ஊழியர்கள் விசனம்" என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி தொடர்பாக தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் தனாக முன்வந்து தன்நிலை விளக்கமொன்றை வழங்கியிருக்கிறார்.

மாலைக்கதிர் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியரைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட அவர், தன் மீது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி கொண்ட நபர்கள் சிலர் - அரசியல் நோக்கங்கருதி இவ்வாறு செய்தியை வெளியிட்டுள்ளதாகவும், தான், நாடாளுமன்றத்தில் உயர் 7

# நுகேகொடையில் ஆட்சிக் கவிழ்ப்பு போராட்டமா?



## இல்லை என்கின்றது மொட்டுக் கட்சி

கொழும்பு, நவ. 13

வரும் நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ள பேரணியானது ஆட்சிக் கவிழ்ப்புக்குரிய போராட்டம் அல்ல என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடை பெறவுள்ள எதிரணியின் பேரணி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 7

## வவுனியாவில் போதை மாத்திரைகளுடன் நான்கு இளைஞர்கள் வசமாகச் சிக்கினர்!




வவுனியா, நவ. 13

போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் நான்கு இளைஞர்கள்கைது செய்யப்பட்டுள்ளனர் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த விசேட தகவலையடுத்துவவுனியாவின் பல் வேறு இடங்ளில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது 4 இளைஞர்கள் போதை மாத்திரைகளுடன 7

## யாழை வந்தடைந்த தொல். திருமாவளவன்



யாழ்ப்பாணம், நவ. 13

விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக வருகை தந்த தொல். திருமாவளவனைத் 7

## திருமலை விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!





திருகோணமலை, நவ. 13

திருகோணமலை, ஹொரவ்பொத்தானை பிரதான வீதியில் இன்று தனியார் பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் ஆனவிழுந்தான் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹொரவ்பொத்தானை பிரதான வீதியின் 10 ஆம் கட்டைப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மஹதிவுல்வெவ பகுதியில் இருந்து தம்பலகாமம் ஆடைத்தொழிற்சாலைக்குச் சென்ற பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற இளைஞர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. 7

# யாழ். பல்கலைக்கழக நிர்வாகச் செயல்களில் தலையிட்டதில்லை!

## நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

“யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிரந்தர நியமனங்கள் கிடைப்பதற்காக நான் குரல் கொடுத்தேன். ஆனால், நியமனங்களை நான் யாருக்காகவும் கோரியதில்லை. இது தேசிய மக்கள்சக்தியின்கொள்கைக்கும்நடைமுறைக்கும் முரணானது.” – என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதில் அரச தரப்பு எம்.பி. ஒருவர், தனது அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவும், தன்னுடைய அனுமதியுடனுமே நியமனங்களை மேற்கொள்ள வேண்டும் என்று நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார் என்று ஊடகங்களில் வெளியான செய்திக்கு மறுப்புத் தெரிவித்து, நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“கல்வி அமைச்சின் கல்வி அமைச்சு சார் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், உயர்கல்விக்கான உபகுழு உறுப்பினராகவும், மேலும் யாழ்ப்பாணம் மாவட்ட கல்விக்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினராகவும் நான் செயற்பட்டு வருகின்றேன்.

2025 செப்டெம்பர் 12ஆம் திகதி காலை 10.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற உயர்கல்வி உப குழு கூட்டத்தில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்விசாரா ஊழியர்கள் நியமனம் இதுவரை மேற்கொள்ளப்படாததற்கான காரணத்தைக் கேட்டேன்.

மேலும், அவை உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினேன். அந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம்பல்கலைக்கழக துணைவேந்தரும் கலந்துகொண்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, 2025 ஒக்டோபர் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நடத்திய போராட்டத்திலும் கலந்துகொண்டு, அவர்களின் கோரிக்கைகள் குறித்த தகவல்களை நேரடியாக அறிந்தேன்.

உடனடியாகக் கல்வி அமைச்சர், கல்வி

அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் கல்வி அமைச்சு சாரா ஆலோசனைக்குழுவுக்கு ஒரு மோஷன் எழுதியும் அனுப்பியிருந்தேன்.

உயர்கல்வி உப குழுவின் தலைவர் பிரதிக் கல்வி அமைச்சர் மதுர செனவி என்னுடன் கலந்துரையாடி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கான ஆளணி நியமனம் தொடர்பாக விரைவில் கூட்டம் நடத்துவோம் என உறுதியளித்துள்ளார்.

எனவே, கல்விக்குப்பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினராக, யாழ்ப்பாணம்பல்கலைக்கழகத்தில் நிரந்தர நியமனங்கள் கிடைப்பதற்காக மட்டுமே நான் செயற்பட்டு வருகின்றேன் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றேன். நான் ஒருபோதும்யாழ்ப்பாணம்பல்கலைக்கழகத்தின் நிர்வாகச் செயல்களில் தலையிட்டதில்லை. மேலும் எந்த நியமனங்களையும் யாருக்காகக் கோரியதும் இல்லை. இது தேசிய மக்கள் சக்தியின் கொள்கைக்கும் நடைமுறைக்கும் முரணானது.

இந்தச் செய்தி உண்மையை மறைத்து ஒரு பிழையை மூடிமறைக்கத் திட்டமிட்ட ஒரு குழுவினரால் பரப்பப்பட்ட தவறான தகவல் என்பதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை. இதில் தொடர்புடையவர்கள் விரைவில் அம்பலப்படுத்தப்படுவார்கள் என்பதையும் பொறுப்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.” – என்றுள்ளது.



# வெங்காய மலைகளை அணிந்து வந்த உறுப்பினர்



கொழும்பு, நவ.13

தம்புள்ளை பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழு செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில், உருளைக்கிழங்கு மற்றும் வெங்காய விவசாயிகளின் அறுவடைக்கு நியாயமான விலை கிடைக்காததை எதிர்த்து வெங்காய மாலைகளை அணிந்து கலந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பிற எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் வெங்காய மாலைகளை அணிந்துகொண்டு தம்புள்ளை பிரதேச சபை வளாகத்திற்கு பேரணியாகச் சென்று, "விவசாயி மகன் ராஜாவாகிவிட்டான், விவசாயி கொல்லப்பட்டான்" போன்ற கோஷங்களை எழுப்பினர்.

நிகழ்வில் பேசிய தம்புள்ளை பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேலும் கூறியதாவது:

விவசாயிகளின் சார்பாக அதிகம் குரல் கொடுக்கும் அமைச்சர்கள் லால் காந்த மற்றும் வசந்த சமரசிங்க தலைமையிலான அரசாங்கம், விவசாயியை ஏமாற்றி விட்டது. அடுத்த ஆண்டு உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயத்தை வாங்க ஒரு திட்டம் வகுக்கப்படுவதாக இப்போது அவர்கள் கூறுகிறார்கள். அடுத்த ஆண்டு சாப்பிட இந்த ஆண்டு சாப்பிட வேண்டும் என்பது இந்த அமைச்சர்களுக்குத் தெரியாதா? இந்தப் பிரச்சினையில் தலையிட்டு உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயத்தை வாங்க ஒரு திட்டத்தை உருவாக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறோம் என்றனர. (ஐ)

## உள்ளூராட்சி மன்றங்கள் முதலீட்டாளர்களை ஈர்க்க வேண்டியது அவசியம்! வடக்கு ஆளுநர் அறிவுறுத்தல்




உள்ளூராட்சி மன்றங்கள் சேவைகளை வழங்குவதற்கும் மேலாக தங்களது வருமானங்களையும் அதிகரிக்க வேண்டும். அதற்குத் தேவையான திட்டங்களை உருவாக்கி, உள்ளூார் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் கௌரவ தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு கிளிநொச்சியில் அமைந்துள்ள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகில் இன்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஆளுநர் அவர்கள் உரையாற்றியபோது,

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் பிரதேசங்களுக்கு முதலீட்டாளர்களை ஈர்க்க வேண்டியது அவசியம் எனக் கூறினார்.

முதலீட்டாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வழங்க வேண்டும். அதேபோன்று ஏற்கனவே முதலீடு செய்தவர்கள் 'அவர்கள் எங்களுக்கு வரி செலுத்துகின்றனர்' என்ற அடிப்படையில், அவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

ஆனால் இந்த விடயங்களில் சில உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் தங்களது சொந்த வருமானத்தின் அடிப்படையிலேயே சபைகளை நிர்வகிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும், அதற்குத் தயாராக தற்போது முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டும் என்பதையும் ஆளுநர் வலியுறுத்தினார்.

உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தை மட்டுமல்லாது, வங்கிக் கடன்கள் மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் உதவிகளைப் பற்றிய விழிப்புணர்வு வடக்கு மாகாணத்தில் குறைவாக உள்ளது. இதேநேரத்தில் தென்பகுதியிலிருந்து அதிகளவில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. இதற்குக் காரணம் மக்களிடையிலும், எங்களது களநிலை அலுவலர்களிடையிலும் தேவையான விழிப்புணர்வு இல்லாமையாகும்.'

இதை மாற்றும் நோக்கத்துடன், வடக்கு மாகாணத்தில் உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியின் செயற்பாடுகளை விரிவாக்கும் வகையில் இவ் விழிப்புணர்வு செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் தங்களது நிலைத்தாபன அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான கடன்களை இந்த நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையையும் அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் வரவேற்புரையாற்றிய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சாம்பசிவம் சுதர்சன் அவர்கள், இன்னும் ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் தன்னிறைவான மன்றமாக மாற வேண்டியுள்ளது. அந்த இலக்கை நோக்கிய வருமானமீட்டல் மற்றும் அபிவிருத்திக்கு இவ்வாறான கடன்கள் பெரிதும் உதவியாக இருக்கும், எனக் குறிப்பிட்டார். வடக்கு மாகாண பிரதம செயலாளரும், அபிவிருத்தி நிதியத்தின் உறுப்பினருமான திருமதி தனுஜா முருகேசன் அவர்கள், தென்பகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் இந்த நிதியத்தின் கடன்களை அதிகளவில் பெற்றுக்கொள்கின்றன. ஆனால் வடக்கிலிருந்து சில மன்றங்களே இதுவரை விண்ணப்பித்துள்ளன, எனத் தெரிவித்தார். இந்த நிகழ்வில் உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் கே.டி.சித்திரபால அவர்கள் நிதியத்தின் செயற்பாடுகள் குறித்து விரிவான விளக்கமளித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் கௌரவ தவிசாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், மற்றும் சபைகளின் செயலாளர்கள் உள்ளிட்டோர் நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ)



## ரணிலை சந்தித்த பின் நாமல் வெளியிட்ட அதிரடி அறிவிப்பு

கொழும்பு, நவ.13

நுகேகொடையில் நவம்பர் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் எதிர்ப்பு பேரணியானது, அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நினைவூட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கட்சி அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்குப் பிறகு ஊடகங்களுக்கு உரையாற்றிய நாமல்,

"கடந்த காலங்களில், SLᴱ க்குள் விவாதங்கள் நடத்தப்பட்டன, ஆனால் இன்று பேரணியின் வெற்றியை உறுதி செய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியை (ருநீ) சந்தித்தோம்.

அரசாங்கத்தை பொறுப்புக்கூற வைப்பதற்கும் அதன் உறுதிமொழிகளின்படி செயல்பட ஊக்குவிப்பதையும் இந்த பேரணி நோக்கமாக கொண்டது. அரசாங்கக் கொள்கைகளால் பாதிக்கப்பட்ட பலர் இந்த பேரணியில் இணைவார்கள்" என்றும் நாமல் கூறினார். அதன்படி, ளுடுகீ மற்றும் UNP பங்கேற்க ஒப்புக்கொண்டுள்ளன, அதே நேரத்தில் மற்ற கட்சிகளுடனான விவாதங்களுக்குப் பிறகு தங்கள் ஈடுபாட்டை உறுதிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது .(ஐ)



## வேறு இடத்திற்கு மாற்றப்படும் காலி சிறைச்சாலை

கொழும்பு, நவ.13

காலி சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வது குறித்து காலி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தற்போது சிறைச்சாலை அமைந்துள்ள சுமார் 4 ஏக்கர் நிலம் மிக அதிக வணிக மதிப்பைக் கொண்டுள்ளது, இதை காலி நகரத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாம் என்று கூறப்படுகின்றது.

எதிர்காலத்தில், சிறையில் உள்ள கைதிகளை நீதிமன்றத்திற்குச் அழைத்துச் செல்வதை நிறுத்திவிடுவார்கள். இனி வழக்கு விசாரணைகள் டிஜிட்டல் முறையில் செய்யப்படும்.

எனவே, சிறைச்சாலை சற்று தொலைவில் இருப்பதால் பெரிய பிரச்சனை இல்லை என்றும் கூட்டத்தில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# ஜவஹர்லால் நேரு 137ஆவது பிறந்த நாள்: அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை

பண்டித ஜவஹர்லால் நேரு 137ஆவது பிறந்த நாள் - 14.11.2025 அமைச்சர் பெருமக்கள் கத்திப்பாரா சந்திப்பில் உள்ள அவர்களது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள். இந்தியத் திருநாட்டின் முதல் பிரதமராகத் திகழ்ந்த பண்டித ஜவர்ஹலால் நேரு 137ஆவது பிறந்த நாளான 14.11.2025 அன்று காலை 09.30 மணியளவில் தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள் சென்னை, கிண்டி, கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள அவர்தம் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூ வி மரியாதை செலுத்துகிறார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 1889ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் நாள் பிறந்தார். தம்மடைய பள்ளிப் படிப்பு முதல் பாரிஸ்டர் பட்டம் வரை இங்கிலாந்து நாட்டிலுள்ள புகழ்மிக்க பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயின்றார். அவர் படிக்கின்ற காலத்திலேயே உலக அரசியலில் அதிக கவனமும், குறிப்பாக, அடிமைப்பட்டிருந்த நாடுகளின் மீது அதிக அக்கறையும் கொண்டிருந்தார். 1919ஆம் ஆண்டு நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைச் சம்பவம் அவரது தீவிர அரசியல் வாழ்க்கைக்குக் காரணமாக அமைந்தது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், “நவீன இந்தியாவின் சிற்பி” என்று நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்பட்டார்.



அண்ணல் காந்தியடிகளின் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவர்களில் ஒருவராக உருவெடுத்தார். சுதந்திரப் போராட்ட காலத்தில் அந்நிய நாட்டின் அடிமைத்தனத்தை எதிர்க்கின்ற வகையில், ஆங்கிலேய அரசுக்கு எதிராக அடுத்தடுத்து நடைபெற்ற பல்வேறு தொடர் போராட்டங்களில் ஏறத்தாழ 9 ஆண்டு காலம் சிறைத் தண்டனை பெற்றார். சிறையில் இருந்த நாட்களில் அவர் எழுதிய உலக வரலாற்றின் துளிகள்”, “இந்தியாவின் தரிசனம்”, “விடுதலையை நோக்கி” ஆகிய நூல்களும், சுதந்திர தாகம் குறித்துத் தம் மகள் இந்திராகாந்தி அவர்களுக்கு எழுதிய 137 கடிதங்களின் தொகுப்புகளான “சுயசரிதை” நூலும் இன்றளவும் உலகளவில் பேசப்படும் சிறந்த நூல்களாகத் திகழ்கின்றன. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியத் திருநாட்டின் முதல் பிரதமராக ஏறத்தாழ 17 ஆண்டு காலத் தொடர் ஆட்சியில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள். கலப்புப் பொருளாதாரக் கொள்கை, பஞ்சசீலக் கொள்கை, அணிசேராக் கொள்கை போன்ற முக்கியக் கொள்கைகளை வகுத்தார். மேலும், அறிவியல், அணுசக்தி, விண்வெளி ஆராய்ச்சி, வேளாண் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவைகளுக்குக் கட்டமைப்புகளை உருவாக்கினார்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களது ஆட்சியில், நெருக்கடிக் காலத்தில் மாநிலங்களின் ஒற்றுமை மற்றும் நலன் கருதிக் கொண்டு வரப்பட்ட மாநில மறுசீரமைப்பு, அலுவல் மொழி ஆணையம் ஆகியவை குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்வுகளாகும். மொழி வாரியான பல்வேறு மாநிலங்களைக் கொண்டிருந்த நம் இந்திய தேசத்தின் ஜனநாயக மாண்பினைக் கட்டமைப்பதிலும், அதனை நிலைநாட்டுவதிலும் உறுதியாக இருந்தார். பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் இளைஞர் சமுதாயம் கற்றறிவதன் மூலமே நாட்டின் வளர்ச்சியினை மேம்படுத்திட இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு, கல்விக்கான அரிய பல திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்திய பெருமைக்கு உரியவர். அன்னாருடைய தியாகத்தையும், திறமையான நிருவாகத்தையும் பறைசாற்றுகின்ற வகையில், இந்தியாவின் பல மாநிலங்களில் உள்ள கல்வி நிலையங்கள், விளையாட்டு அரங்கங்கள், நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பலவற்றிற்கு அவர் பெயர் சூட்டப்பட்டுப் பெருமைப்படுத்தப்பட்டுள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், “பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அறிவாற்றலுடன் நல்ல இதயத்தைக் கொண்டிருந்த பெருமகன் குழந்தையின் மழலையைக் கேட்டதும் தாமும் குழந்தையாகிவிடும் இயல்பினையும், ஏழைகள் வதைபடுவதைக் காணும்போது அவர்கள் நிலையெண்ணிக் கண்ணீர் சிந்திடும் கனிந்த இரக்கத்தினையும்: நல் இதயத்தினையும் பெற்றவர்” என்று பெருமிதம் பொங்கிடக் குறிப்பிட்டுள்ளார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970ஆம் ஆண்டில், நேரு கண்ட ஜனநாயகம் என்ற தலைப்பில் ஆற்றிய உரையில், “நீதிக்கு எதிரானவற்றையெல்லாம் நேர் நின்று எதிர்த்ததாலே நேருவானார். இந்திய நீள் எல்லைக் கோடுதனைப் பெரும் பகைவர் கடந்த போது என்ன நேருமோ என்றேங்கிய இந்திய மக்கள் நெஞ்சின் துயர்துடைத்து ஏதுவும் நேராது நான் இருக்குமட்டும் எனச் சொல்லி நேருவானார்! “போற்றியுள்ளார்.

எனக் கவிபாடி பண்டித நேரு பெருமைகளைப் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள். தம் வாழ்நாளின் இறுதிக் காலம் வரையில் குழந்தைகள், இளைஞர் நலன், கல்வி வளர்ச்சி ஆகியவற்றிலேயே அதிகம் நாட்டம் கொண்டவராக இருந்தார். ஆசிய ஜோதி, மனிதருள் மாணிக்கம் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், குழந்தைச் செல்வங்களின் மீது கொண்டிருந்த அளவற்ற அன்பு காரணமாக அன்னாரது பிறந்த நாளான நவம்பர் 14ஆம் நாள் குழந்தைகள் தினமாக நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிறந்த தினமான நவம்பர் 14 ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு நடைபெறும் நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள். (ஐ)




## டெல்லி விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் செங்கோட்டை மெட்ரோ ரயில் நிலையம் மறு அறிவிப்பு வரும் வரை மூடல்

டெல்லி கார் வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து செங்கோட்டை அருகேவுள்ள லால் கிலா மெட்ரோ ரயில் நிலையம் மறுஅறிவிப்பு வரும் வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 10ம் தேதி டெல்லி செங்கோட்டையில் உமர் என்பவன் ஓட்டி வந்த கார் மூலம் வெடிகுண்டு தாக்குதல் சம்பவத்தை அரங்கேற்றினான். இந்த தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர். தலைநகரில் பேரதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த சம்பவம் தொடர்பாக என்ஐஏ குழு அமைத்து விசாரித்து வருகிறது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் டாக்டர்கள் போன்ற உயர்நிலையில் உள்ளவர்களுக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்தது.

மேலும், இது தொடர்பாக அடுத்தடுத்து டாக்டர்கள் சிக்கி வருகின்றனர். இந்த நிலையில், இண்டிகோ விமான நிறுவனத்தின் குறைகேட்பு பக்கத்தில், டெல்லி விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் பொதுமக்களை பீதியில் ஆழ்த்தியுள்ளது. இதனிடையே டெல்லி மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,” பாதுகாப்பு காரணங்களுக்காக டெல்லி லால் கிலா மெட்ரோ ரயில் நிலையம் மறுஅறிவிப்பு வரும் வரை செயல்படாது. ஆனால், மற்ற மெட்ரோ நிலையங்கள் வழக்கம்போல செயல்படும். மேற்கொண்டு தகவல்கள் அடுத்தடுத்து அறிவிக்கப்படும்,”எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மேகதாது அணை கட்டுவது தொடர்பாக திட்ட அறிக்கை தயாரிக்க கர்நாடக அரசுக்கு உச்சநீதிமன்றம் அனுமதி



டெல்லி:மேகதாது அணை கட்டுவது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க கர்நாடக அரசுக்கு உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாடு அரசின் கடும் எதிர்ப்பை மீறி உச்ச நீதிமன்றம் கர்நாடக அரசுக்கு அனுமதி வழங்கியது. விரிவான திட்ட அறிக்கை தயாரித்து மத்திய நீர்வள ஆணையத்திடம் வழங்கப்படும் போது தமிழ்நாடு எதிர்ப்பை பதிவுசெய்ய வேண்டும். தமிழ்நாடு அரசு, காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு ஆகியவற்றின் கருத்தை கேட்டு அதன்படி முடிவு எடுக்க வேண்டும். காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பிக்கும் உத்தரவுகளை காவிரி நீர் சம்பந்தமான அனைத்து மாநில அரசுகளும் முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என கர்நாடக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு 3 சதவீதம் அகவிலைப்படி உயர்வு: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



*தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு 3 சதவீதம் அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். அகவிலைப்படி உயர்வால் சுமார் 16 லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர். கடந்த ஜூலை மாதம் 1 ஆம் தேதி முதல் முன்தேதியிட்டு அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும். அரசுஊழியர்களுக்கான அகவிலைப்படி 55 சதவீதத்தில் இருந்து 58 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அகவிலைப்படி உயர்வால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.1,829 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.(ஐ)*

# கர்ப்ப காலத்தில் நாள்பட்ட சிறுநீர் பாதை நோய்த்தொற்றுகள்



கர்ப்ப காலத்தில் ஏற்படும் நாள்பட்ட சிறுநீர் பாதை நோய்த்தொற்றுகள், சிகிச்சையளிக்கப்படாவிட்டால் தாய் மற்றும் வளரும் குழந்தை இருவரையும் பாதிக்கும் ஒரு தொடர்ச்சியான கவலையாகும். UTIகள் ஏற்கனவே பெண்களில் பொதுவானவை, ஆனால் கர்ப்ப காலத்தில் ஏற்படும் ஹார்மோன் மற்றும் உடற்கூறியல் மாற்றங்கள் எளிதில் பாதிக்கப்படும் தன்மையை அதிகரிக்கின்றன. தொற்றுகள் மீண்டும் மீண்டும் அல்லது தொடர்ந்து வரும்போது, அவை நாள்பட்டவை என வகைப்படுத்தப்படுகின்றன, மேலும் கவனமாக கவனம் மற்றும் சிறப்பு கவனிப்பு தேவை.

சிறுநீர் பாதை நோய்த்தொற்று (ருவுஜ) என்பது சிறுநீரகங்கள், சிறுநீர்ப்பை, சிறுநீர்க்குழாய்கள் மற்றும் சிறுநீர்க்குழாய் உட்பட சிறுநீர் அமைப்பின் எந்தப் பகுதியிலும் ஏற்படும் தொற்று ஆகும். பெரும்பாலான ருவுஜ கள் பாக்டீரியாவால் ஏற்படுகின்றன, ஆனால் அவை பூஞ்சை அல்லது வைரஸ்களாலும் ஏற்படலாம்.

பொதுவான அறிகுறிகள் பின்வருமாறு:

சிறுநீர் கழிக்க ஒரு வலுவான, தொடர்ந்து தூண்டுதல்

சிறுநீர் கழிக்கும் போது எரியும் உணர்வு

மேகமூட்டமான, இருண்ட, இரத்தம் தோய்ந்த சிறுநீர்

இடுப்பு வலி, குறிப்பாக இடுப்பின் மையத்தில் மற்றும் அந்தரங்க எலும்பின் பகுதியைச் சுற்றி

நம்பகமான நிபுணர்களிடமிருந்து இரண்டாவது கருத்தைப் பெற்று,

நம்பிக்கையான, தகவலறிந்த முடிவுகள்.

கர்ப்ப காலத்தில் சிறுநீர் பாதை நோய்த்தொற்றுகள் ஏன் பொதுவானவை?

கர்ப்பம் சிறுநீர் அமைப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது, இது பெண்களை தொற்றுநோய்களுக்கு ஆளாக்குகிறது:

புரோஜெஸ்ட்டிரோன் என்ற ஹார்மோன் சிறுநீர் பாதை தசைகளை தளர்த்தி, சிறுநீர் ஓட்டத்தை மெதுவாக்குகிறது.

வளர்ந்து வரும் கருப்பை சிறுநீர்ப்பையில் அழுத்துகிறது, இதனால் முழுமையான காலியாக்குதல் கடினமாகிறது.

சிறுநீரின் கலவையில் ஏற்படும் மாற்றங்கள் பாக்டீரியா வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

இந்த காரணிகள் அனைத்தும் கர்ப்ப காலத்தில், குறிப்பாக இரண்டாவது மற்றும் மூன்றாவது மூன்று மாதங்களில், மீண்டும் மீண்டும் வரும் ருவுஜ அபாயத்தை அதிகரிக்கின்றன.

### கர்ப்ப காலத்தில் நாள்பட்ட ருவுஜ களின் சிக்கல்கள்

நாள்பட்ட ருவுஜ கள், சிகிச்சையளிக்கப்படாவிட்டால், தாய் மற்றும் குழந்தை இருவருக்கும் கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும். கர்ப்ப காலத்தில் நாள்பட்ட சிறுநீர் பாதை நோய்த்தொற்றுகளுடன் தொடர்புடைய சில முதன்மை ஆபத்துகள் கீழே உள்ளன.

### சிறுநீரக தொற்று அபாயம்

நாள்பட்ட நோயின் மிகவும் தீவிரமான சிக்கல்களில் ஒன்று சிறுநீர் பாதை நோய்த்தொற்றுகள் இது சிறுநீரக தொற்று ஆகும், இது பைலோனெப்ரிடிஸ் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நிலை கடுமையான வலி, காய்ச்சல் மற்றும் வாந்தியை ஏற்படுத்தும். தொற்று இரத்த ஓட்டத்தில் பரவினால், அது உயிருக்கு ஆபத்தானது. சிறுநீரக நோய்த்தொற்று உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு பெரும்பாலும் மருத்துவமனையில் சேர்க்கப் படுதல் மற்றும் நரம்பு வழியாக நுண்ணுயிர் எதிர்ப்பிகள் தேவைப்படுகின்றன.

### முன்கூட்டிய பிரசவம்

நாள்பட்ட ருவுஜ கள் குறைப்பிரசவத்தின் அபாயத்தை அதிகரிக்கலாம். தொற்றுநோயால் ஏற்படும் அழற்சியானது கருப்பைச் சுருக்கங்களுக்கு வழிவகுக்கும், இதனால் குழந்தை முன்கூட்டியே பிறக்கும். குறைப்பிரசவ குழந்தைகள் சுவாச பிரச்சனைகள், வளர்ச்சி தாமதங்கள் மற்றும் தொற்றுகள் உள்ளிட்ட பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளுக்கு அதிக ஆபத்தில் உள்ளனர்.

### குறைந்த பிறப்பு எடை

கர்ப்ப காலத்தில் நாள்பட்ட UTI களின் மற்றொரு







சிக்கல் குறைந்த பிறப்பு எடை. சிகிச்சை அளிக்கப்படாத ருவுஜ உடைய தாய்மார்களுக்கு பிறக்கும் குழந்தைகள் பிறக்கும் போது 5.5 பவுண்டுகளுக்கும் குறைவான எடையுடன் இருக்கும். குறைந்த பிறப்பு எடை உடல் வெப்பநிலையை பராமரிப்பதில் சிரமம் மற்றும் உணவளிப்பதில் சிக்கல் போன்ற பிற உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

### உயர் இரத்த அழுத்தம் மற்றும் ப்ரீக்ளாம்ப்சியா

நாள்பட்ட ருவுஜ கள் உயர் இரத்த அழுத்தத்திற்கு பங்களிக்கலாம் மற்றும் கடுமையான சந்தர்ப்பங்களில், முன்சூல்வலிப்பு. ப்ரீக்ளாம்ப்சியா என்பது உயர் இரத்த அழுத்தம் மற்றும் பிற உறுப்புகளுக்கு சேதம் விளைவிக்கும் ஒரு

(7ஆம் பக்கம் பார்க்க...)

# 43 நாள் அரசு முடக்கம் முடிவுக்கு வந்தது: நிதி மசோதாவில் டிரம்ப் கையெழுத்து!



அரசு நிதி மசோதாவில் அந்நாட்டு அதிபர் டிரம்ப் கையெழுத்திட்டார். அண்மையில் அமெரிக்க செனட் சபையில் நிதி மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா நிறைவேற 60 சதவீத வாக்குகள் தேவை. ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் மசோதாவுக்கு எதிராக வாக்களித்ததால், நிதி மசோதா நிறைவேற்றப்படாததால், கடந்த 43 நாள்களாக அமெரிக்க அரசு நிர்வாகம் முடங்கி உள்ளது. நிர்வாகம் முடங்கியிருப்பது குறித்து ஜனநாயக கட்சியினருடன் சமரசம் செய்ய வாய்ப்பில்லை என அதிபர் டிரம்ப் திட்டவட்டமாக தெரிவித்து வந்தார்.

இந்த நிலையில், தங்களது கட்சி நிலைப்பாட்டை மீறி, அரசுத் துறைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் சமரசம் செய்துகொள்ள சில ஜனநாயகக் கட்சி எம்.பி.க்கள் முன்வந்ததையடுத்து, இந்த மசோதா செனட் அவையில் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஓவல் அலுவலகத்தில் செலவீனங்களுக்கான மசோதாவில் டிரம்ப் கையெழுத்திட்டார். 43 நாட்களுக்கு அரசு நிர்வாகம் முடக்கம் முடிவுக்கு வந்தது. இது குறித்து பேசிய அதிபர் டிரம்ப், கடந்த 43 நாள்களாக, சட்டவிரோதமாக குடியேறுபவர்களுக்காக கோடிக்கணக்கான டாலர்களைப் பறிக்க முயற்சித்த ஜனநாயகக் கட்சியினர், அமெரிக்க அரசை முடக்கினர்.

இன்று, மிரட்டி பணத்தை பறிப்பதற்கு ஒருபோதும் அடிபணிய மாட்டோம் என்ற தெளிவான செய்தியை நாங்கள் சொல்ல விரும்புகிறோம் என்று கூறினார். (ஐ)

## டெல்லி கார் வெடிப்பு நிகழ்ந்த சோகமான நேரத்தில் இந்தியா உடன் இஸ்ரேல் துணையாக நிற்கும்: நெதன்யாகு உறுதி



டெல்லி கார் வெடிப்பு சம்பவத்துக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கண்டனம் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் செங்கோட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகே, கடந்த 10ம் தேதி பரபரப்பான மாலை நேரத்தில் போக்குவரத்து சிக்னலில் நின்ற கார் வெடித்துச் சிதறியது. இதில், அருகில் இருந்த பல வாகனங்கள் தீப்பிடித்து 12 பேர் பலியாகினர். 27 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். டெல்லி கார் குண்டுவெடிப்பு சம்பவம் திட்டமிட்ட தீவிரவாத செயல் என்றும், இந்த கொடூர சம்பவத்தில் சம்பந்தப்பட்ட யாரும் தப்பிக்க முடியாது என்றும் பிரதமர் மோடி தலைமையிலான பாதுகாப்பு அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாட்டையே உலுக்கிய இந்த விவகாரத்தின் பின்னணியில் உள்ளவர்களை கண்டறிய தீவிர விசாரணை நடந்து வருகிறது. இந்நிலையில் டெல்லி கார் வெடிப்பு சம்பவத்துக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கண்டனம் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு எங்களின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். டெல்லி கார் வெடிப்பு நிகழ்ந்த சோகமான நேரத்தில் இந்தியா உடன் இஸ்ரேல் துணையாக இருக்கும். பயங்கரவாதம் நமது நகரங்களை தாக்கலாம் நமது ஆன்மாக்களை அசைக்க முடியாது என என்றும் கூறினார். (ஐ)



## பெரு நாட்டில் பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்த விபத்தில் 37 பேர் உயிரிழப்பு

*பெரு நாட்டில் 650 அடி பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்த விபத்தில் 37 பேர் உயிரிழந்தனர். படுகாயமடைந்த 24 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். பெரு நாட்டை சிலியுடன் இணைக்கும் சுர் நெடுஞ்சாலையில் லாமோசாஸ் என்ற நிறுவனத்தின் பேருந்து 40 பயணிகளுடன் காரவேலி மாகாணத்தில் உள்ள சாலா என்ற நகரத்தில் இருந்து அரேக்விபா என்ற இடத்திற்கு சென்று கொண்டிருந்தது. அப்போது வளைவு ஒன்றில் திரும்பும் போது, எதிரே வந்த சரக்கு வேன் ஒன்றின் மீது பேருந்து மோதி விபத்துக்குள்ளானது. மோதிய வேகத்தில் பேருந்து 650 அடி பள்ளத்தாக்கில் உருண்டு விழுந்தது. இந்த கோர விபத்தில் சம்பவ இடத்திலேயே 37 பேர் பலியாகினர். இந்த விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்புத்துறை மற்றும் மீட்புக் குழுவினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்தனர். மீட்புப் பணிகளில் இறங்கிய அவர்கள், இடிபாடுகளில் இருந்த 37 சடலங்களை மீட்டனர். மேலும் படுகாயம் அடைந்த 24 பேரை மீட்டு சிகிச்சைக்காக அருகில் இருந்த மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். அவர்களில் 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது. தென் அமெரிக்க நாடுகளில் சமீப ஆண்டுகளில் நடந்த மோசமான விபத்துகளில் ஒன்றாக இந்த விபத்து கருதப்படுகிறது.*

*(ஐ)*



## ரஷ்ய ஹெலிகாப்டர்கள், சீன விமானங்கள் மியான்மர் விமானப்படையில் இணைப்பு

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிற நாடுகள் மியான்மர் மீது ஆயுத விற்பனை தடை உள்ளிட்ட தடைகளை விதித்துள்ளது. ஆனால் ரஷ்யாவும், சீனாவும் மியான்மர் ராணுவத்துக்கு பல மில்லியன் டாலர் மதிப்புள்ள உபகரணங்களை தொடர்ந்து வழங்கி வருகின்றது. சர்வதேச அழுத்தத்தை மீறி ராணுவத்தால் நடத்தப்படும் மியான்மர் அரசிற்கு ரஷ்யா ஹெலிகாப்டர்களையும், சீனா விமானங்களையும் வழங்கி வருகின்றது. ராணுவம் வெளியிட்டுள்ள புகைப்படத்தில் ரஷ்யாவில் இருந்து 3 எம்ஐ-38டி ஹெலிகாப்டர்களும், சீனாவில் இருந்து இரண்டு ஒய்-8 விமானங்களும் வாங்கப்பட்டுள்ளதை காட்டுகின்றன. போக்குவரத்து விமானமானது மியான்மரின் வான்வெளி பாதுகாப்பை உறுதி செய்யும் என்று ராணுவம் தெரிவித்துள்ளது. (ஐ)

## கண்ணியமே முக்கியம்.. பாகிஸ்தான் உடனான வர்த்தக உறவுகளை படிப்படியாக குறைக்க ஆப்கானிஸ்தான் அரசு முடிவு

கண்ணியமே முக்கியம்.. பாகிஸ்தான் உடனான வர்த்தக உறவுகளை படிப்படியாக குறைக்க ஆப்கானிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் இடையே மோதல் ஏற்பட்டது. பாகிஸ்தான் ராணுவம் நடத்திய தாக்குதலில் ஆப்கனில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். பதிலுக்கு ஆப்கானிஸ்தானை ஆளும் தலிபான்கள் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் ராணுவத்தினர் உயிரிழந்தனர். ஒரு சில நாட்கள் நடந்த மோதல், சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளின் தலையீட்டால் ஆப்கன் - பாகிஸ்தான் இடையே ஒப்பந்தம் ஏற்பட தாக்குதல் நிறுத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர் க்வாஜா ஆசிப், " இந்தியாவின் மடியில் அமர்ந்து கொண்டு ஆப்கானிஸ்தான், எங்களுக்கு எதிராக செயல்படுகிறது," எனக்குற்றம்சாட்டியிருந்தார். இதனை மறுத்த இந்திய அரசு, பாகிஸ்தான் தனது சொந்த தோல்விகளை மற்ற நாடுகள் மீது சுமத்துவதாகவும், ஆப்கானிஸ்தான் இறையாண்மை மீது தாக்குதல் நடத்த முயற்சிப்பதாகவும் தெரிவித்து இருந்தது.

ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் மவ்லாவி முகமது யாகூப் முஜாகித் கூறுகையில், பாகிஸ்தானின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. எங்களின் பிராந்தியத்தை மற்ற நாடுகளுக்கு எதிராக பயன்படுத்துவதை எங்கள் கொள்கை ஆதரிக்காது. ஆப்கன், சுதந்திரமான நாடு என்ற முறையில் இந்தியாஉடன் உறவை பராமரிக்கிறோம் என்று கூறியிருந்தது. இந்நிலையில், பாகிஸ்தானுடனான வர்த்தக வழிதடத்தை முடிந்தவரை புறக்கணித்து பிற நாடுகளிடம் வணிக உறவை அதிகரிக்க ஆப்கானிஸ்தான் வர்த்தகர்களுக்கு தாலிபான் அரசு உத்தரவிட்டுள்ளது.

வர்த்தகத்தை ஒரு அரசியல் கருவியாக பாகிஸ்தான் பயன்படுத துவதால் ஆப்கானியர்களின் கண்ணியத்தை பாதுகாத்திட, அந்த உறவை புறக்கணிக்கவும், குறிப்பாக மருந்துப் பொருட்களை வாங்குவதை முற்றிலுமாக நிறுத்துமாறும் தாலிபான் அரசு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கல்விக்கான உப குழு உறுப்பினர் என்ற வகையிலேயே மேற்படி விடயம் தொடர்பாகப் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், விடயம் தொடர்பில் தனக்குச் சம்பந்தமில்லை என்ற செய்தியை இன்றைய மாலைக்கதிர் பத்திரிகையில் வெளியிட வேண்டும் என்றும் அவர் "அன்பாக"க் கேட்டுக் கொண்டார்.

இதேநேரம் - இந்தச் செய்திபற்றி, பல்கலைக்கழகத்தின் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் வினவிய போது, அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் "கரிசனை"யுடன் அடிக்கடி தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு விசாரித்தமையை உறுதிசெய்யமுடிந்தது.

**ஆசிரியர் குறிப்பு:**

- நேற்று வெளியான செய்தியில் அதிகாரத் தலையீடு செய்யும் அரசியல்வாதி யார் என்பது எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஆனாலும் தனாக முன்வந்து தன்னிலை விளக்கமொன்றை வழங்கி, சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தான் என்று "ஒப்புதல் வாக்குமூலம்" அளித்தமைக்கு தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவனுக்கு நன்றிகள்.
- நாடாளுமன்ற உறுப்பினர் நிர்வாக ஆசிரியருடன் தொலைபேசியில் பேசிய விடயங்களுக்கு மேலதிகமாகப் பல விடயங்களைத் தனது முகப்புத்தகப் பதிவு ஒன்றின் மூலமும் ஒப்புவித்திருக்கிறார். அந்தப் பதிவு, செய்தியை வழங்கிய மூலங்களை அச்சுறுத்தும் பாணியிலும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
- நிர்வாக ஆசிரியருடன் தொலைபேசி உரையாடலின் போதும், செய்தி மூலத்தை அறியத்தருமாறு கோரியிருந்தார். மாலைக்கதிர் எந்தக் காலத்திலும் பத்திரிகைக்குரிய இலக்கணத்தில் இருந்து வழுவி மூலங்களைக் காட்டிக்கொடுக்காது என்பதை ஆணித்தரமாகக் குறிப்பிட விரும்புகிறோம்.
- பெயர் குறிப்பிடாமல் வெளிவந்த செய்தி ஒன்றுக்காக ரஜீவன் எம்.பி "தொப்பி"யைத் தனது தலையில் போட்டுக்கொண்டதை அடுத்து எமது ஆசிரியபீடக்குழு இந்த விடயம் தொடர்பில் ஆர்வம் காட்டி - அக்கறையுடன் பல மேலதிக விவரங்களையும் திரட்டியுள்ளது. தேவை ஏற்படின் அவற்றை வெளியிடுவதற்கும் நாம் தயாராக இருக்கிறோம்.

(இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக வெளியீடு 2ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

(ஆ–ர்)

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்து 150 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், திருநாவற்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரு இளைஞரிடம் இருந்து 80 போதை மாத்திரைகளும், அதே பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு இளைஞரிடம் இருந்து 30 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரிடம் இருந்து 20 போதை மாத்திரைகளும், லக்சபானா வீதி, கத்தார் சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞா ஒருவரிடம் இருந்து 20 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து மேற்படி நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## யாழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் வரவேற்றார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நடத்துகின்ற 'கார்த்திகை வாசம்' மலர்க்கண்காட்சி யாழ். நல்லூர் கிட்டு பூங்காவில் (சங்கிலியன் பூங்கா) நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதன் தொடக்க விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வதற்காகத் தொல்.திருமாவளவன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு தொல். திருமாவளவன் இன்று முள்ளிவாய்க்காலுக்கும் சென்று அஞ்சலி செலுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விபத்தில் கபுகொல்லாவ - ஆனவிழுந்தான் பகுதியைச் சேர்ந்த எஹியா உல்முதீன் அஹீல் அஹமட் (வயது 19) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நுகேகொடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"நவம்பர் 21 ஆம் திகதி பேரணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும். இது ஆட்சிக் கவிழ்ப்புக்குரிய போராட்டம் அல்ல என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

ஏனெனில் அடுத்த தேர்தலின்போது நாட்டு மக்கள் நிச்சயம் இந்த ஆட்சியைக் கவிழ்ப்பார்கள்.

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதே பேரணியின் பிரதான நோக்கம்.

போதை ஒழிப்பு நடவடிக்கை வரவேற்கத்தக்கது. எனினும், போதை ஒழிப்பு என்ற போர்வையில் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதியை மறந்து செயற்படுவது ஏற்புடையது அல்ல." - என்றார்.

## தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவுக்கு பிடியாணை!


தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளரான துசித ஹல்லொலுவவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் லஹிரு சில்வா இன்று (13) பிடியாணை பிறப்பித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி பகுதியில் தாம் பயணித்த வாகனம் மீது சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறி, போலியான முறைப்பாடு செய்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபராக துசித ஹல்லொலுவ பெயரிடப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு தொடர்பிலான விசாரணை இன்றையதினம் நீதிமன்றுக்கு வந்தபோது, சந்தேக நபரான துசித ஹல்லொலுவ நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை.

இதையடுத்து, கொழும்பு மேலதிக நீதவான் லஹிரு சில்வா இந்த பிடியாணையைப் பிறப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# மழையுடனான வானிலை அதிகரிக்கும்



வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அடுத்த சில நாட்களில் மழையுடனான வானிலை அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாறை மாவட்டத்திலும் அதிகாலை வேளையில் பனிமூட்டமான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக அதிகரித்து வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கு மாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (ஐ)

# கர்ப்ப காலத்தில் ......

ஆபத்தான நிலை, பெரும்பாலும் கல்லீரல் மற்றும் சிறுநீரகங்கள். இது தாய் மற்றும் குழந்தை இருவருக்கும் கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும் வலிப்பு மற்றும் மரணம் கூட.

**கர்ப்ப காலத்தில் ருவுஜ களை நிர்வகித்தல்**

கர்ப்ப காலத்தில் ருவுஜ களை நிர்வகிப்பது அபாயங்களைக் குறைப்பதற்கும் ஆரோக்கியமான கர்ப்பத்தை உறுதி செய்வதற்கும் முக்கியமானது. எடுக்க வேண்டிய சில நடைமுறை படிகள் இங்கே:

**வழக்கமான பெற்றோர் ரீதியான பரிசோதனைகள்**

தாய் மற்றும் குழந்தை இருவரின் ஆரோக்கியத்தையும் கண்காணிக்க வழக்கமான பெற்றோர் ரீதியான பரிசோதனைகள் அவசியம். இந்த சோதனைகள், ருவுஜ கள் நாள்பட்டதாக மாறுவதற்கு முன்பு அல்லது மிகவும் கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும் முன் கண்டறிய உதவும்.

**நீரேற்றம்**

நன்கு நீரேற்றமாக இருப்பது ருவுஜ களைத் தடுப்பதற்கான எளிய மற்றும் மிகவும் பயனுள்ள வழிகளில் ஒன்றாகும். நிறைய திரவங்களை குடிப்பது சிறுநீரை நீர்த்துப்போகச் செய்கிறது மற்றும் சிறுநீர் பாதையில் உள்ள பாக்டீரியாக்களை வெளியேற்ற உதவுகிறது.

**முறையான சுகாதாரம்**

சரியான சுகாதாரம் பாக்டீரியா பரவுவதை தடுக்க உதவும். மலக்குடல் பகுதியிலிருந்து சிறுநீர்க்குழாய் வரை பாக்டீரியா பரவுவதைத் தவிர்க்க, கழிப்பறையைப் பயன்படுத்திய பிறகு எப்போதும் முன்னிருந்து பின்பக்கமாக துடைக்கவும்.

**குருதிநெல்லி சாறு மற்றும் சப்ளிமெண்ட்ஸ்**

குருதிநெல்லி சாறு மற்றும் சப்ளிமெண்ட்ஸ் ருவுஜ களைத் தடுக்க உதவும் என்று சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் ஆராய்ச்சி தேவைப்பட்டாலும், குருதிநெல்லிப் பொருட்கள் பொதுவாக கர்ப்ப காலத்தில் பாதுகாப்பானதாகக் கருதப்படுகிறது. இருப்பினும், எந்தவொரு புதிய சப்ளிமெண்டைத் தொடங்குவதற்கு முன், உங்கள் சுகாதார வழங்குநரை அணுகுவது எப்போதும் சிறந்தது.

**நுண்ணுயிர் கொல்லிகள்**

நுண்ணுயிர் எதிர்ப்பிகள் UTI களுக்கு மிகவும் பொதுவான சிகிச்சையாகும். உங்களுக்கு நுண்ணுயிர் எதிர்ப்பிகள் பரிந்துரைக்கப்பட்டால், உங்கள் சுகாதார வழங்குநரின் வழிகாட்டுதலின்படி முழுப் படிப்பையும் முடிக்கவும். நுண்ணுயிர் எதிர்ப்பிகளை ஆரம்பத்திலேயே நிறுத்துவது நோய்த்தொற்று மீண்டும் வருவதற்கு வழிவகுக்கும்.

**கர்ப்ப காலத்தில் ருவுஜ அபாயங்கள்**

சிகிச்சையளிக்கப்படாவிட்டால், நாள்பட்ட சிறுநீர் பாதை நோய்த்தொற்றுகள் கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும்:

பைலோனெப்ரிடிஸ் (சிறுநீரக தொற்று), இதற்கு மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டியிருக்கலாம்.
குறைப்பிரசவம் அல்லது குறைந்த பிறப்பு எடை
ப்ரீக்ளாம்ப்சியாவின் அதிகரித்த ஆபத்து
கரு வளர்ச்சி கட்டுப்பாடு
கடுமையான சந்தர்ப்பங்களில் அம்னோடிக் திரவ தொற்று

கர்ப்ப காலத்தில் ருவுஜ-யின் அபாயங்களைப் புரிந்துகொள்வது, உடனடி மற்றும் பயனுள்ள சிகிச்சையின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

மருத்துவ கவனிப்பை எப்போது தேட வேண்டும்

கர்ப்ப காலத்தில் ருவுஜ யின் ஏதேனும் அறிகுறிகளை நீங்கள் சந்தித்தால், மருத்துவ உதவியை நாடுவது மிகவும் முக்கியம். ஆரம்பகால சிகிச்சையானது தொற்று நாள்பட்டதாக மாறுவதைத் தடுக்கலாம் மற்றும் சிக்கல்களின் அபாயத்தைக் குறைக்கலாம்.

**நீங்கள் மருத்துவ உதவியை நாட வேண்டும் என்பதற்கான அறிகுறிகள்:**

காய்ச்சல்
கடுமையான முதுகு அல்லது பக்க வலி
குமட்டல் மற்றும் வாந்தி
சிறுநீரில் இரத்தம்

உங்கள் ஆரோக்கியமே எல்லாமே - இன்று உங்கள் நல்வாழ்வுக்கு முன்னுரிமை கொடுங்கள்.

**உங்கள் சந்திப்பைத் திட்டமிடுங்கள் தீர்மானம்**

கர்ப்ப காலத்தில் நாள்பட்ட சிறுநீர் பாதை நோய்த்தொற்றுகள் தாய் மற்றும் குழந்தை இருவருக்கும் பல்வேறு சிக்கல்களுக்கு வழிவகுக்கும் ஒரு தீவிர கவலையாகும். அபாயங்களைப் புரிந்துகொள்வது மற்றும் யுஜகளை நிர்வகிப்பதற்கும் தடுப்பதற்கும் முன்முயற்சியுடன் செயல்படுவது ஆரோக்கியமான கர்ப்பத்தை உறுதிப்படுத்த உதவும். வழக்கமான மகப்பேறுக்கு முந்தைய பராமரிப்பு, சரியான நீரேற்றம், நல்ல சுகாதாரம் மற்றும் சரியான நேரத்தில் மருத்துவ தலையீடு ஆகியவை ருவுஜ களை திறம்பட நிர்வகிப்பதற்கு முக்கியமாகும்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு
கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
JRIDE
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk